---

# நாகொடை பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 நவம்பர் 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 பெப்ரவரி 13 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, நாகொடை பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நாகொடை பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

சபையினால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாணடின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,651,590 ஆக இருந்தது.

#### (ஆ) கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 92,541,502 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,378,161 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 256,449 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 114 | 71 | 212 |
| (ii) | வாடகை | 2,178 | 2,528 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 470 | 620 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 20,977 | 17,132 | 27,030 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 519,083 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,756,201 |

### 2.2.3 நிறுவை வருமானம்

மீளாவாண்டு மற்றும் முன்னைய வருடங்களில் சபையினால் அறவிட வேண்டியிருந்த

ஏக்கர் வரி ரூபா 211,788 தொகை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 27,030,336 தொகை என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 தொலை பேசி / மின் சமிஞ்ஞை கோபுரங்களுக்கான கட்டணம்

அரசாங்கத்தின் காணிகளை நீண்ட கால குத்தகையின் கீழ் பெற்றிருந்த 04 நிறுவனங்னினால் நிர்மாணிக்கப்பட்ட மின் சமிஞ்ஞை கோபுரங்களிலிருந்து ரூபா 236,000 தொகையான கட்டணம் அறவிட வேண்டியிருந்தது.

### 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

சபைக்குரிய ரூபா 3,900,000 பெறுமதியான ஜே.சீ.பீ இயந்திரம் 2011 மார்ச் 18 ஆந் திகதி தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2012 திசெம்பர் 05 ஆந் திகதி வரையான 20½ மாத காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் பொது முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகள் தொடர்பான விழாச் செலவினங்கள் சம்பந்தமாக ஒரு வருடத்திற்கு கூட்டு மொத்தமாக ரூபா ஆயிரத்தை விஞ்சாத வகையில் செலிவட வேண்டியிருந்ததுடன் அதனை விஞ்சுகின்ற போது அதற்காக அமைச்சரின் முன் அங்கீகாரம் எழுத்து மூலம் பெறவேண்டிய போதிலும் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது 2011 ஆம் ஆண்டின் போது விழாச் செலவினமாக ரூபா 79,678 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 2.5 ஒப்பந்த நிருவாகம்

உடுகம சமகிகம கிராமவாசிகளுக்கு ஏற்பட்டுள்ள குடி நீர் பிரச்சினைக்குத் தீர்வாக உடுகம தெற்கு நீர் உத்தேசத் திட்டத்தின் 4 ஆம் கட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை ரூபா 534,979 தொகை செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சரியான இடத்தை பரீட்ச்சிக்காமையினால் நீர்ப்பம்பியைச் செயற்படுத்துவதற்குத் தேவையான

மின்சக்தி காணப்படாமையின் காரணமாக இது வரையிலும் செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது. 2012 மார்ச் 13 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது நீர்ப்பம்பியை வைப்பதற்கு நிர்மாணிக்கப்பட்ட கொட்டகையின் கதவு துருப்பிடித்து கழன்றிருந்தமையும் அதனைச் சுற்றி காடு வளர்த்திருந்தமையும் தாங்கியின் அருகில் பதிக்கப்பட்ட குழாய்கள் காணப்படாமையும் அவதானிக்கப்பட்டன.

## 2.6 வீதி வினக்குகளுக்கான பணத்தை மீளளிப்புச் செய்யாமை

---

வீதி விளக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 288,239 தொகையும், வீதி விளக்கு பாராமரிப்பிற்காக ரூபா 289,525 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. வீதி விளக்குகள் பொருத்துதல் தொடர்பான ஆலோசனையில் காணப்படுகின்ற நீர்ப்பாசனம் மற்றும் மின்சக்தி அமைச்சின் 1998 மார்ச் 16 ஆந் திகதிய பீஎப்/12/91 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வீதி விளக்குகளை புதிதாக ஸ்தாபிப்பதற்கு முன் மின்சக்தி, எரிபொருள் அமைச்சின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாது 48 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. அவ்வாறே 2011 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டிற்காக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் எந்தக் கொடுப்பனவுகளும் சபைக்கு கிடைதிருக்கவில்லை.

## 2.7 கூட்டிணைந்த திட்டம்

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கொள்வனவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

---

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்